



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 285 | 08.04.2026 | WEDNESDAY | PANGUNI: 25 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 285 | 08.04.2026 | புதன்கிழமை | பங்குனி : 25 | விலை : ரூ.5/– |


## “முயற்சி செய்து பாருங்கள்” பாகிஸ்தான் அமைச்சருக்கு

# “ராஜ்நாத் சிங் சவால்”

புதுடெல்லி: ஏப்.8-

பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தினால் இம்முறை எல்லையில் இல்லாமல் கொல்கத்தா மீது தாக்குதல் நடத்துவோம் என அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் கூறியதற்கு, முயற்சி செய்து பாருங்கள் என்று ராஜ் நாத் சிங் சவால் விடுத்துள்ளார்.



மேற்கு வங்கத்தில் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பேசிய பாஜக மூத்த தலைவரும், பாதுகாப்பு அமைச்சருமான ராஜ்நாத் சிங், “இந்தியா மீது தாக்குதல் நடத்துவோம் என்று கூறுவதற்கு முன்பாக 1971 போரில் என்ன நடந்தது என்பதை அந்த நாடு கருத்தில் கொள்வது நல்லது. 1971 போர் இரு நாடுகளுக்கும் இடையே நடந்த மிகப் பெரிய ராணுவ மோதல். அதில், பாகிஸ்தான் இரண்டு நாடுகளாக பிரிக்கப்பட்டன. வங்கதேசம் உருவாக அது வழிவகுத்தது.

55 ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவத்தை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் மேற்கு வங்கத்தின் மீது கண் வைக்க முயன்றால், இந்த முறை பாகிஸ்தான் எத்தனை துண்டுகளாக சிதறும் என்பது கடவுளுக்கே தெரியும்” என்று எச்சரித்தார்.

ஈரான் போரால் ஏற்பட்டுள்ள சூழலை கருத்தில் கொண்டு இந்தியா மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்த முயன்றால், இந்தியாவின் பதிலடி முன்னெப்போதும் இல்லாததாக இருக்கும் என்று கடந்த வாரம் எச்சரித்திருந்தார். இது தொடர்பாகப் பேசிய ராஜ் நாத் சிங், “தற்போதைய சூழலில் நமது அண்டை நாடு எந்தவொரு தவறான செயலையும் செய்யக்கூடும். அவ்வாறு அது செய்தால், இந்தியாவின் பதிலடி முன்னெப்போதும் இல்லாததாகவும் தீர்க்கமானதாகவும் இருக்கும். ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடிந்துவிடவில்லை” என தெரிவித்திருந்தார்.

இதையடுத்து பாகிஸ்தானின் சியால்கோட்டில் செய்தியாளர்களை சந்தித்த அந்நாட்டு பாதுகாப்பு துறை அமைச்சர் கவாஜா ஆசிப், “இந்தியா மீண்டும் பாகிஸ்தான் மீது ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முயன்றால், இறைவனின் அருளால் நமது பதில் தாக்குதலை கொல்கத்தாவுக்கே கொண்டு செல்வோம்.

இந்த முறை நமது தாக்குதல் 200 அல்லது 250 கிலோமீட்டர் தூரம் என்ற அளவில் எல்லையோரத்தில் இருக்காது. அவர்களது பிராந்தியத்தில் நுழைந்து, அவர்களது வீட்டிலேயே தாக்குவோம்” என தெரிவித்திருந்தார். இந்நிலையில், இதற்கு ராஜ்நாத் சிங் பதிலடி கொடுத்துள்ளார்.

## கல்பாக்கம் அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு

கல்பாக்கம்: ஏப்.8-

கல்பாக்கத்தில் உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன்மாதிரி வேக ஈனுலை, மாற்ற நிலையை அடைந்துள்ளதற்காக அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட, புதிய அணுமின் நிலையம் கடந்த 2004ம் ஆண்டிலிருந்து பாவினி என்ற பெயரில் கட்டப்பட்டு வருகிறது. மேலும், கடந்த 2024ம் ஆண்டு மார்ச் மாதம் பிரதமர் மோடி, மேற்கண்ட புதிய அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், தோரியத்திலிருந்து, நியூட்ரான் பிரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இது படிப்படியாக முன்னேறி மின் உற்பத்தியை தொடங்கும் நிலையில் உள்ளது. இதுகுறித்து, பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பக்கத்தில், ”இந்தியா தனது அணுசக்தி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுத்து, தனது அணுசக்தி பயணத்தில் ஒரு தீர்க்கமான அடியை எடுத்து வைத்துள்ளது. கல்பாக்கத்தில், உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன்மாதிரி வேக அணு உலை நிலை மாற்ற நிலையை எட்டியுள்ளது.

இந்த மேம்பட்ட அணு உலை, தனது அறிவியல் திறனின் ஆழத்தையும், நமது பொறியியல் முயற்சியின் வலிமையையும் பிரதிபலிக்கிறது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில், நமது பரந்த தோரியும் இருப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு தீர்க்கமான படியாகும். இந்தியாவுக்கு, இதுபெருமைக்குரிய தருணம். நமது விஞ்ஞானிகளுக்கும், பொறியாளர்களுக்கும் வாழ்த்துக்கள்” என தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## “அப்பட்டமான பிளாக்மெயில் இது!” மகாராஷ்டிர முதல்வருக்கு தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி கண்டனம்

சென்னை: ஏப்.8-

“திராவிட மாடல் அரசின் மதுரை கோவை மெட்ரோ திட்டங்களை புறக்கணித்துவிட்டு, நாங்கள் அறிவித்த வேட்பாளரை நீங்கள் தேர்வு செய்தால்தான், நாங்கள் இதை செய்வோம் என மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் சொல்வது அப்பட்டமான பிளாக்மெயிலுக்கு ஈடாகும்” என திமுக எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி கூட்டாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.



இது குறித்து அவர்கள் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “மதுரை கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக திராவிட மாடல் அரசு பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. மே 7, 2021 அன்று, உடனடியாக மதுரை மெட்ரோ திட்டம் தொடங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்து, கொள்கை வழிகாட்டுதல்களை வெளியிட்டார். பிப்ரவரி 20, 2023 அன்று சாத்தியக்கூறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மார்ச் 27, 2023 அன்று விரிவான திட்ட அறிக்கைக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

பிப்ரவரி 19, 2024 அன்று மெட்ரோ ரயில் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கை (DPR) அதிகாரப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டது. இதன் மூலம் மாநில அளவிலான பணிகள் 100% நிறைவு பெற்றுள்ளன. செப்டம்பர் 6, 2025 அன்று திருமங்கலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, சுரங்கம் தோண்டும் பணிகளில் இருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. இந்த அனைத்து பணிகளையும் முதல்வர் ஸ்டாலின் முன்னெடுத்து முடித்துக் காட்டியுள்ளார்.

திராவிட மாடல் அரசின் மதுரை கோவை மெட்ரோ திட்டங்களை புறக்கணித்துவிட்டு, நாங்கள் அறிவித்த வேட்பாளரை நீங்கள் தேர்வு செய்தால்தான், நாங்கள் இதை செய்வோம் என சொல்வது அப்பட்டமான பிளாக்மெயிலுக்கு ஈடாகும். குறிப்பாக மக்கள் தொகையை காரணமாக காட்டி, மெட்ரோ திட்டங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்காமல் இருந்தது. தமிழர் நலனுக்கு மொத்தமாக தூரோகம் செய்யும் செயல். நாங்கள் செய்த வேலைகளை மறைத்துள்ளீர்கள். இதனால் தான் இத்தேர்தலை டெல்லி மற்றும் தமிழ்நாட்டுக்கான தேர்தல் என சொல்கிறோம்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 20 லட்சம் அளவை எட்டவில்லை என்றுக் கூறி கோவை மற்றும் மதுரை மெட்ரோவுக்கு பாஜக அரசு அனுமதி வழங்கவில்லை. ஆனால் மக்கள் தொகை குறைவான ஆக்ரா மற்றும் பாட்னாவுக்கு மெட்ரோ ரயில் அனுமதி வழங்கி இரட்டை நிலைபாட்டை பின்பற்றுகிறது ஒன்றிய பாஜக அரசு.

பாட்னாவிஸ் துணை முதல்வராக இருந்த காலத்தில், மகாராஷ்டிரா மாநிலத்துக்கு வரவேண்டிய பல முதலீடுகளை குஜராத்துக்கு மாற்றி விட்டனர். அவர், மதுரையில் மெட்ரோ திட்டத்தை கொண்டு வருவேன் எனக் கூறுவது ஏற்கத்தக்கதல்ல” என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### கோவை தெற்கு தொகுதி

# தேறுவாரா செந்தில் பாலாஜி...

கோவை, ஏப்.8-

பரபரப்பான தமிழக அரசியல் களத்தில் கரூரை விட்டு கோயம்புத்தூருக்கு " ஜம்ப் " ஆகிவிட்டார் செந்தில் பாலாஜி.கரூரில் கூட்ட நெரிசலில் 41 பேர் பலியான சம்பவத்தை அடுத்து, தனது பெயருக்கு களங்கம் இருப்பதாக உணர்ந்த செந்தில் பாலாஜி, கோவைக்கு மாறி இருப்பதாக பேசப்படுகிறது.



செந்தில் பாலாஜி



அம்மன் அர்ஜுனன்

இது ஒரு புறமிருக்க, திமுகவினரோ கரூரை திமுகவின் கோட்டையாக செந்தில் பாலாஜி ஏற்கனவே மாற்றி விட்டார். தற்போது கோயம்புத்தூர் திமுகவின் கோட்டையாக மாற்றுவதற்காக தான், கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடுகிறார் என்று கூறுகிறார்கள்.

எது எப்படியோ கோவை தெற்கு தொகுதி செந்தில் பாலாஜிக்கு இன்னும் உறுத்தலாகவே இருந்து வருகிறதாம். காரணம் என்னவென்று விசாரித்த போது, தேர்தல் தேதி அறிவிப்பிற்கு முன்பே ஒரு வீட்டுக்கு 26 பொருட்கள் தருவதாக கூறி டோக்கன் கொடுத்துவிட்டு, இறுதிவரை கொடுக்காமல் ஏமாற்றி விட்டாராம்.

கோவை தெற்கு தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் எம்எல்ஏவான அம்மன் அர்ஜுனன் மிகவும் எளிமையானவர். மேலும் தொகுதியில் நடக்கும் தேர் திருவிழா விசேஷங்கள் மட்டுமில்லாது, ஒவ்வொரு வீட்டின் சுக துக்க நிகழ்ச்சிகளில் தானும் கலந்து கொண்டு இறுதிவரை இருந்து வருவாராம். தொகுதியில் எம்எல்ஏவைப்போல் நடந்து கொள்ளாமல், சிம்பிளாக தான் நடந்து வருவாராம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் மிகப் பரிச்சயமாகவும் எப்போதும் தோழமையுடனும் நடந்து கொள்வதால், கோவை தெற்கு பகுதியின் செல்லப்பிள்ளை என்ற அளவிற்கு இருந்து வருகிறார்.

இந்த தகவல்கள் எல்லாம், கோவை தெற்கு தொகுதியில் நுழைந்த பிறகு தான் செந்தில் பாலாஜிக்கு தெரியவந்துள்ளது. இதனால் தவறாக முடிவு எடுத்து விட்டோம் என்ற நினைப்பில், பொருள் தருவதாக கொடுத்த டோக்கன்களுக்கு பொருட்களைவும் கொடுக்காமல் சைலன்ட் ஆகிவிட்டதாக தொகுதியில் பேசப்பட்டு வருகிறது.

இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக் கொண்டுள்ள செந்தில் பாலாஜி தேறுவது கஷ்டம்! கஷ்டம்!! கஷ்டம்!!! என்று திமுகவினரே வெதும்புகின்றனர்.

அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்பி.வேலுமணி, தன்னுடைய தொகுதியை விட கோவை தெற்கு தொகுதியில் தான் முழு கவனத்தை செலுத்தி வருகிறாராம்.

## “பாஜகவுடன் ஸ்டாலினுக்கு ரகசிய உடன்பாடு என மம்தா பேசுவது அபத்தம்” ஜோதிமணி எம்.பி காட்டம்

சென்னை: ஏப்.8-

பாஜகவுடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு ரகசிய உடன்பாடு உள்ளதாக குற்றம்சாட்டிய மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கு காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘இந்தியாவின் ஒரு மூத்த அரசியல்வாதி, மூன்று முறை மேற்கு வங்கத்தின் முதல்வர் மம்தா பானர்ஜி இப்படிக் கொஞ்சமும் பொறுப்பில்லாமல், உண்மைக்குப் புறம்பாக கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், திமுக கட்சிகளை பாஜகவோடு ரகசிய உடன்பாடு வைத்துள்ளார்கள் என்று பேசுவது அபத்தமானது மட்டுமல்ல, கடுமையான கண்டனத்துக்குரியது.

தமிழகத்தில் நாங்கள் பாஜகவுக்கு எதிராக ஒவ்வொரு தினமும் யுத்தம் நடத்திக் கொண்டுள்ளோம். எமது மொழி, இனம், பண்பாடு, வளர்ச்சி அனைத்துக்கும் எதிராக உள்ள பாஜகவை இந்தத் தேர்தலில் தோற்கடிப்பதே எங்கள் இலக்கு. அஇஅதிமுக முகமூடி அணிந்து கூட பாஜக தமிழகத்தில் கால்பதித்து விடக்கூடாது என்பதில் எமது தமிழினம் உறுதியோடு உள்ளது.

எமது தலைவர் ராகுல் காந்தி அச்சமற்று அயராது மோடி அரசுக்கும், பாஜகவுக்கும் எதிராக சமரசமற்ற போராட்டத்தை நடத்திவருகிறார். தமிழகத்தின் உரிமைகளுக்காக முதல்வர் திமுகவின் தலைவர் மு.க.ஸ்டாலின் பாஜகவோடு சமரசமற்று போராடி வருகிறார்.

தேசிய அளவில் நாடாளுமன்றத்தில் நாங்கள் பாஜக அரசை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் திமுக எப்பொழுதும் எங்கள் பக்கம் நிற்கிறது. ஆனால் திரிணமூல் காங்கிரஸ் பல நேரங்களில் அப்படிச் செயவதில்லை. ஆனாலும் உங்கள் மீது எந்த அவதூறுகளையும் நாங்கள் பரப்பியதில்லை. ஏனென்றால் பாஜகவுக்கு எதிரான யுத்தத்தில், நாட்டின் நலன் கருதி எதிர்கட்சிகள் ஒன்றாகவே பயணிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நீங்களும் அந்த நிலைப்பாட்டிலேயே நில்லுங்கள். அதுதான் மேற்கு வங்கத்துக்கும், இந்தியாவுக்கும் நல்லது.

நீங்கள் 15 ஆண்டு காலம் செய்த சாதனைகளைச் சொல்லி வாக்குக் கேளுங்கள். மக்கள் உங்கள் பக்கம் நிற்பார்கள். கூட்டணிக் கட்சிகளை அவதூறு செயவதன் மூலம் நீங்கள் அடையக் கூடியது ஒன்றும் இல்லை. தமிழகத்தில் மட்டுமல்ல கேரளம், புதுச்சேரி, அசாம் ,மேற்கு வங்கம் உள்ளிட்ட எந்த மாநிலத்திலும் பாஜக வெல்லக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவைத் தோற்கடித்து, இந்தியாவைப் பாதுகாக்க எமது தலைவர் ராகுல் காந்தி தலைமையேற்று நடத்தும் போராட்டத்தில் நீங்கள் பங்கேற்காவிட்டாலும் பரவாயில்லை. பலவீனப்படுத்த முயற்சி செய்யாதீர்கள். இந்த தேசம் உங்களை மன்னிக்காது’ எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று மேற்கு வங்கத்தில் பிரச்சாரம் செய்த மம்தா பானர்ஜி, “தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் கட்சியினர் பாஜகவுடன் ரகசிய உடன்பாடு வைத்துள்ளனர்.

தேர்தல் ஆணையம் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட திறமையான ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் அதிகாரிகளைத் தமிழகத்துக்கு தேர்தல் பார்வையாளர்களாக அனுப்பியுள்ளது. இதன் மூலம் மேற்கு வங்கத்தில் பாஜக தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறது. மேற்கு வங்க மாநிலத்தின் முக்கிய பொறுப்புகளில் தங்களுக்குச் சாதகமான அதிகாரிகளை பாஜக அமர்த்துகிறது” என்று அவர் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.




# “தேனியில் திமுக கூட்டணிக்கு வாக்கு சேகரிப்பு களம் இறங்கும் தொமுச படை!

தேனி ஏப். 8-

தேனி மின் கழக மேற்பார்வையாளர் அலுவலகத்தில், தேனி மாவட்டத் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் (தொமுச) பேரவை கவுன்சில் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத் திட்டத் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, பேரவை கவுன்சில் செயலாளர் சக்கரை எம். முருகன் முன்னிலை வகித்தனர்.

*தேர்தல் தீர்மானம்:*

வரும் சட்டமன்றத் தேர்தலில் தேனி மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் (தேனி, போடி, பெரியகுளம், ஆண்டிபட்டி) திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களைப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யத் தொழிலாளர்கள் அனைவரும் தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுவது என ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைப்புசாரா தொமுச மாவட்டச் செயலாளர் இரா. கணேசன், தலைவர் பி. சந்திர பாண்டியன், டாஸ்மாக் தொமுச நிர்வாகிகள் பி. சுந்தரபாண்டியன், ஓ. செல்லம், மயிலை ஏ. கருப்பசாமி, பஞ்சாலை தொமுச தலைவர் பி. ஆனந்தராஜ், மின் கழகத் தொமுச தேனி தெற்கு பி. வேலுச்சாமி உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



■ தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் கூட்டணி கட்சியான குறிஞ்சியர் முன்னேற்ற பேரவை சார்பாக, ஈரோடு மாவட்டம் பவானிசாகர் சட்டமன்ற தொகுதி ( தனி ) வேட்பாளர் விழி.சந்திரன், தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்களிடத்தில் வேட்பு மனு தாக்கல் செய்த போது. உடன் மாநில தலைவர் குறிஞ்சி ப.சந்திரசேகரன்,கொங்கு தேச மக்கள் மறுமலர்ச்சி கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் வி.முனுசாமி, சுப்பிரமணியம் (காவல்துறை ஓய்வு), திருப்பூர் மாநகர அமைப்பாளர் பூபதி, ஆகியோர் கலந்து கொண்டனர்.




■ திருப்பூரை மையமாகக் கொண்ட இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில், காங்கேயம் சாலையில் உள்ள அலுவலகம் அருகில் தாகம் தீர்க்க தர்பூசணி பந்தல் இன்று திறக்கப்பட்டது. திறப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஆதரவற்ற முதியோர்களை வரவழைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு, ரிப்பன் வெட்டி தர்பூசணி பந்தலை திறந்து வைத்தனர். முன்னதாக திருநங்கைகள் அவர்களுக்கு பூத்தூவி வரவேற்பு அளித்தனர். பின்னர் பொது மக்களுக்கு தர்பூசணி, வெள்ளரிக்காய், முலாம்பழம் உள்ளிட்ட பழ வகைகள் வழங்கப்பட்டது. பொதுமக்களும் ஆர்வமாக வந்து பழச்சாறு அருந்தி தாகத்தை தனித்தனர். நிகழ்வில் இந்திரா சுந்தர தொண்டு நிறுவனர் இந்திரா, செயலாளர் ராஜா முகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் பாலமேட்டில் உள்ள இந்து நாடார்கள் உறவின்முறை சங்கத்திற்கு தனித்து புராதன பாத்தியப்பட்ட பத்திரகாளியம்மன்,மாரியம்மன் கோவில்களில் பங்குனி பொங்கல் திருவிழா நடந்தது.வானவேடிக்கையுடன் மாரியம்மன்க்கு பூப்பல்லக்கு நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை இந்து நாடார் உறவின்முறை சங்கத்தினர் செய்திருந்தனர்.




■ ஈரோடு கிழக்குத் தொகுதி சட்டமன்ற வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன், மாநகராட்சி அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், முஸ்லிம் லீக் மாவட்டச் செயலாளர் ஆரிப்லட்சுமி கதிரவன்.

# “10 வருடம் எம்.எல்.ஏ.. 5 வருடம் அமைச்சர்.. சீனிவாசன் திண்டுக்கல்லுக்குச் செய்தது என்ன?

## ரவுண்ட் ரோட்டில் ரவுண்டு கட்டிய ஐபி செந்தில் குமார்

சின்னாளபட்டி, ஏப்.08-

10 வருடம் எம்எல்ஏவாகவும் ஐந்தாண்டு காலம் அதிமுக ஆட்சியில் அமைச்சராக இருந்த திண்டுக்கல் சீனிவாசன் திண்டுக்கல் தொகுதிக்காக என்ன செய்தார் என்று தேர்தல் பிரச்சாரத்தில் திமுக வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் சரமாரி கேள்வி எழுப்பியதோடு, திண்டுக்கல் தொகுதி மக்கள் விரும்பும் சட்டமன்ற உறுப்பினராக என்றும் இருப்பேன் என்று ஐ.பி.செந்தில்குமார் உறுதி அளித்தார்.




திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார் தனது முதல் பிரச்சாரத்தை திண்டுக்கல் மாநகர் ரவுண்ட் ரோடு ரங்கநாயகி நகர் அபிராமி குப்பம் லட்சுமி சுந்தரம் காலனி அரசன் நகர் திருநகர் அண்ணா நகர் குமரன்திருநகர் கோபால் நகர்இ பகுதிகளில் வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் திறந்த வேனில் இருந்தவாறு பிரச்சாரம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அப்போது அவர்கள் பொதுமக்கள் மத்தியில் பேசும்போது, 10 வருடங்கள் அதிமுக எம்எல்ஏவாகவும், ஐந்து வருடங்கள் அமைச்சராகவும் இருந்த அதிமுக வேட்பாளர் சீனிவாசன் தொகுதி மக்களுக்கு என்ன செய்தார். பத்தாண்டு காலத்தை வீணடித்து விட்டு மக்கள் மத்தியில் வந்து பாவ மன்னிப்பு கேட்பது போல நான் யாருக்கும் எந்த கெடுதலும் பண்ணவில்லை நான் யாருக்கும் நல்லது செய்யவில்லை எந்த கெட்டதும் செய்யவில்லை. எம் எல் ஏ என்பவர் ஊருக்கு செய்ய வேண்டியதை செய்ய வேண்டும் ஊரின் வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும் மக்களுக்காக எந்த திட்டத்தையும் கொண்டு வரவில்லை.

நான் பழனி சட்டமன்ற தொகுதியில் 10 வருடங்கள் எம்எல்ஏவாக இருந்தேன் மக்களுக்கு என்ன செய்தேன் என நான் பட்டியலிடுகின்றேன் அதேபோல் சீனிவாசன் பட்டியலிட முடியுமா என கேள்வி எழுப்பினார். அதை விடுத்து விட்டு எங்களைப் போன்ற வேட்பாளர்களை எதிர்க்கட்சித் தலைவர்களை கொச்சையாக விமர்சனம் செய்வது இது போன்ற மோசமாக பேசி மக்கள் மத்தியில் வாக்குகளை கேட்டுக் கொண்டிருக்கிறார். அவரின் பேச்சு பொதுமக்கள் மத்தியில் எடுபடாது. 10 வருடங்கள் வீணாகிவிட்டதால் இன்று திண்டுக்கல் ஒரு வளர்ச்சியை நோக்கி பயணிக்க வேண்டிய அவசியமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவே தலைநகரான திண்டுக்கலை வளர்ச்சி நோக்கி பயணத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

தமிழகத்தில் பல மாநகராட்சிகள் உள்ளது திண்டுக்கல் மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. ஆனால் ஸ்மார்ட் சிட்டி திகேன்சல் செய்யப்பட்டது. எம்எல்ஏவாக வந்தவுடன் ஸ்மார்ட் சிட்டியாக மாற்ற அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். திண்டுக்கல் நகருக்கு ஆத்தூர், காவேரி ஆகியவற்றில் இருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் கூடுதலாக தண்ணீர் தேவைப்படுவதால் வைகை அணையில் இருந்து 700 கோடி செலவில் திண்டுக்கல் ஆத்தூர் நிலக்கோட்டை ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் நிறைவேற்றினால் தங்குதடையின்றி பொதுமக்களுக்கு குடி தண்ணீர் கிடைக்கும் நிலை உருவாகும் என பேசினார்.

பிரச்சாரத்தின் போது திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி மதிமுக மாவட்ட செயலாளர் செல்வராகவன் மாநகர் காங்கிரஸ் தலைவர் மணிகண்டன் தேமுதிக மாவட்ட செயலாளர் மாதவன் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி மைதீன் பாவா, திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, மாவட்ட இலக்கிய அணியைச் சேர்ந்த முருகானந்தம், விவசாய அணியைச் சேர்ந்த இல.கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர், கலைராஜன், மாநகர பொருளாளர் மீடியா சரவணன், திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்ருல்ஹக், ஜானகிராமன் உட்பட திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.



# திருப்பூர் மாவட்ட வேளாண்மைத்துறையின் சிறுதானியங்களால் அலங்கரிக்கப்பட வாக்காளர் விழிப்புணர்வு

திருப்பூர், ஏப்.8-

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதையொட்டி மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வேளாண்மைத்துறையின் சார்பில் சிறுதானியங்களால் அலங்கரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதை பார்வையிட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, இணை இயக்குநர் (வேளாண்மை) எம்.ஆதிசாமி. மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவி இயக்குநர் (பயிற்சி) செல்வி.ஹர்ஷா அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ ஈரோடு மாவட்டம் பவானி வட்டம் கோபி யூனியன் பெருந்தலையூர் ஊராட்சி மன்ற அலுவலகம் பழுதடைந்துள்ள நிலையில் இருக்கும் காட்சி.



■ மதுரை மாவட்டம்கிழக்கு தொகுதி ஒத்தக்கடை வட்டாட்சியர் அலுவலகத்தில், மூர்த்தி சுயேச்சையாக போட்டி யிடுகிறார். தேர்தல் அதிகாரி கருணாகரன்அவர்களிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

# அலங்காநல்லூர் ஒன்றிய பகுதியில் திமுக வேட்பாளர் வெங்கடேசன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு

அலங்காநல்லூர்.
ஏப்.08-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றிய பகுதியில் சோழவந்தான் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசன், உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். ஆதனூர் கிராமத்தில் பிரச்சாரத்தை தொடங்கிய வேட்பாளருக்கு பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் மலர்தூவி வரவேற்றனர்.

பின்னர் பேசிய வேட்பாளர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் மூர்த்தி ஆலோசனையின் பேரில் நமது தொகுதிக்கு எண்ணற்ற திட்டங்களை வாங்கி கொடுத்துள்ளோம். அரசு கட்டிடங்கள் கிராமத்து சாலைகள் தூய்மையான குடிநீர் சிக்கலான சாலைகளை கடந்து செல்ல தரமான பாலங்கள் அமைத்து கொடுத்துள்ளோம்



மகளிர் திட்டமான விடியல் பயணம் மகளிர்க்கு ரூபாய் ஆயிரம்,இலவச மின்சாரம் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள் உள்ளிட்ட என்று பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி காட்டியுள்ளோம்.

மக்களுக்காக இரவு பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கின்றோம். 23ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் அனைவரும் உதயசூரியன் சின்னத்திற்கு அதிகப்படியான வாக்குகளை பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பின்னர் தேவசேரி, முடுவார்பட்டி, வெள்ளையம்பட்டி,

சரந்த ாங்கி,பாலைரப்பட்டி,கோடாங்கிபட்டி, பொந்துக்கம்பட்டி, பள்ளப்பட்டி, உசிலம்பட்டி, 66,மேட்டுப்பட்டி, சேந்தமங்கலம், ஆகிய கிராமப் பகுதிகளில் வாக்கு சேகரித்த அவருக்கு திமுக கட்சி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்து, ஆளுயர மாலை கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்பு கொடுத்தனர்.

இதில் ஒன்றிய செயலாளர்கள் தனராஜ் பரந்தாமன் முத்தையன், அருண்குமார், முன்னாள் யூனியன் சேர்மன் ராம்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய பொருளாளர் சுந்தர், முன்னாள் யூனியன் துணை சேர்மன் சங்கீதா மணிமாறன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, காயத்ரிஇதயச்சந்திரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சந்தனகருப்பு,ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் யோகேஷ்,

துணை அமைப்பாளர் சின்னஊர்சேரி ஆனந்த், நிர்வாகிகள் ஏகேடி தெய்வம், கோவிலூர் செந்தில்குமார், சின்னஊர்சேரி தியாகு, குமரேசன்,

எம்எம்.சரவணன், வேல்முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மெட்ரோ திட்ட அறிக்கையை கூட முறையாக தயாரித்து தரவில்லை” முதல்வர் ஸ்டாலின் மீது அண்ணாமலை சாடல்

சென்னை, ஏப்.8-

‘மதுரை மெட்ரோ திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையைக் கூட, திமுக அரசின் முதல்வர் ஸ்டாலின் முறையாகத் தயாரித்துக் கொடுக்கவில்லை’ என தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘மதுரை மெட்ரோ திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கையைக் கூட, முறையாகத் தயாரித்துக் கொடுக்க இயலாத கையாலாகாத திமுக அரசின் முதல்வர் ஸ்டாலின்.

மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் கூறியதன் பொருள் என்னவென்றால், தமிழகத்தில் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அமையவிருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில், விரிவான திட்ட அறிக்கை முறையாகத் தயாரிக்கப்பட்டு, மதுரை மெட்ரோ திட்டத்துக்கான அனுமதி பெறப்படும் என்பதுதான்.

ஆட்சிக்கு வந்தவுடன், வெளிநாட்டு முதலீடு ஈர்ப்பு என்ற பெயரில் குடும்பத்துடன் பலமுறை இன்பச் சுற்றுலா சென்றீர்களே... என்ன முதலீடு வந்தது? எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது? மத்திய அரசின் திட்டங்களால் பெறும் வளர்ச்சிக்கு, உங்கள் ஸ்டிக்கரை ஒட்ட கூச்சமாக இல்லையா?

உங்கள் ஆட்சியில், குப்பை அள்ளுவதில் கூட ஊழல் செய்து, சென்னை, மதுரை, திருப்பூர் உள்ளிட்ட மாநகரங்களை குப்பைக் கூடங்களாக மாற்றி, குப்பை மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறீர்களே. மதுரையில் அமைப்போம் என்று உங்கள் தேர்தல் வாக்குறுதியில் கூறிய வேளாண் பல்கலைக்கழகம் எங்கே?’ எனத் தெரிவித்துள்ளார்.

# “சிறுபான்மையின மக்களின் அரண் திமுக அரசு!” குட்டத்துப்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, ஏப்.8-

சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பாக இருப்பது திமுக அரசு என்று குட்டத்துப்பட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, பாஜக அரசு 100 நாள் வேலைத்திட்டத்தை முடக்க நினைத்தாலும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விடமாட்டார் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதிபட பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியின் திமுக வெற்றி வேட்பாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி கிராமம் கிராமமாக சென்று தொடர்ந்து தனக்கு வாக்களித்து வரும் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்தும், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தும் வருகிறார். குட்டத்துபட்டி ஊராட்சிக்குட்பட்ட காலாடிபட்டி, மைலாப்பூர், குட்டத்து ஆவாரம்பட்டி, குட்டத்துப்பட்டி ஆகிய கிராமங்களில் தீவிரமாக பிரச்சாரம் செய்து உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அப்போது பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கடந்த 5 வருடங்களாக சிறுபான்மையின மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்றால், அதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த திமுக அரசுதான் என்றார்.

வைகை அணையிலிருந்து குழாய் மூலம் குடி தண்ணீர் கொண்டுவரப்பட்டு ரெட்டியார்சத்திரம் பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் தயாராக உள்ளது. தேர்தல் முடிந்த பின்பு அதற்கான பணிகள் விரைவில் தொடங்கும். ரெட்டியார்சத்;திரம் வடபகுதியில் உள்ள குளங்களுக்கு மழை நீர் வீணாகாமல் சிமெண்ட் வாய்க்கால் கட்டிக்கொடுத்ததுபோல் தென் பகுதியில் உள்ள குட்டத்துப்பட்டி, அனுமந்தராயன்கோட்டு, கோனூர், மாங்கரை ஆகிய ஊராட்சி பகுதியில் உள்ள குளங்களுக்கும் சிமெண்ட் வாய்க்கால்கள் அமைத்துக் கொடுக்கப்படும். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக் கணக்கான விவசாயிகள் மகிழ்ச்சியில் கை தட்டி ஆரவாரம் செய்தனர்.

அதன் பின்னர் அருகிலுள்ள கிராமங்களுக்கு சென்று உதயசூரியன்; சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்;. பிரச்சாரத்தின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், மணி, தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன், பொதுக்குழு உறுப்பினர் டென்னி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி கிறிஸ்துராஜா, கிளைச் செயலாளர்கள் சேசுராஜ், இளங்கோ பிரிட்டோ, கர்த்தர் அருள்ராஜா, சூசைமாணிக்கம், மற்றும் வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் அணியினர், இளைஞரணியினர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். தங்கள் ஊராட்சி பகுதிக்கு வந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அப்பகுதியைச் சேர்ந்த பங்கு தந்தை மற்றும் அருட்சகோதரிகள் சால்வை அணிவித்து வெற்றி பெற வாழ்த்து தெரிவித்தனர்.

# ‘ராக்கெட் வெடிகுண்டு’ தாக்குதலில் 2 குழந்தைகள் உயிரிழப்பு: மணிப்பூரின் பிஷ்ணுபூரில் ஊரடங்கு அமல்

பிஷ்ணுபூர், ஏப்.8-

மொய்ராங்கில் ராக்கெட் தாக்குதல் எனச் சந்தேகிக்கப்படும் ஒரு சம்பவத்தில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்ததோடு, அவர்களின் தாயார் காயமடைந்தது பதற்றத்தை உருவாக்கியுள்ளது. இதனால் மணிப்பூர் அரசு 5 மாவட்டங்களில் 3 நாட்களுக்கு செல்போன் இணைய சேவையை முடக்கியுள்ளது. மேலும், பிஷ்ணுபூரில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



மணிப்பூரின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் மலை மற்றும் பள்ளத்தாக்கு பகுதிகளின் எல்லையில் அமைந்துள்ள, பதற்றம் நிறைந்த கிராமமான மொய்ராங்கின் 'த்ராங்லாபி அவாங் லெய்காய்' பகுதியில், இன்று (ஏப்.7) அதிகாலையில் ஒரு வீட்டின் மீது நடத்தப்பட்ட ராக்கெட் அல்லது மோட்டார் குண்டு தாக்குதலில், தூங்கிக் கொண்டிருந்த 5 வயது சிறுவனும், 6 மாத பெண் குழந்தையும் உயிரிழந்தனர். அவர்களின் தாயார் காயமடைந்தார். இந்தச் சம்பவம் காரணமாக மணிப்பூரில் மீண்டும் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து மொய்ராங் மக்கள் ஒரு பெட்ரோல் நிலையத்துக்கு அருகே இரண்டு எண்ணெய் டேங்கர்களையும், ஒரு சரக்கு லாரியையும் தீயிட்டுக் கொளுத்தினர். மேலும், அங்குள்ள காவல் நிலையத்துக்கு வெளியே டயர்களை எரித்ததோடு, தற்காலிகக் காவல் சோதனைச்சாவடி ஒன்றையும் சேதப்படுத்தினர். இதனால் பாதுகாப்புப் படையினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து இன்று வெளியிடப்பட்ட உள்துறைத் துறையின் உத்தரவின்படி, இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு, தௌபால், காக்சிங் மற்றும் பிஷ்ணுபூர் ஆகிய மாவட்டங்களில் செல்போன் இணைய சேவை முடக்கப்பட்டுள்ளது. அதேபோல செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்குப் பின் பிஷ்ணுபூர் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தவறான தகவல்கள் மற்றும் பொய்ப் பிரச்சாரங்கள் பரவுவதைக் கட்டுப்படுத்தவும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை அவசியமானது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், இந்தக் கட்டுப்பாடுகள் ஏப்ரல் 7 அன்று பிற்பகல் 2 மணி முதல் அமலுக்கு வரும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 குழந்தைகள் கொல்லப்பட்ட தாக்குதலை மிருகத்தனமான செயல் என்றும், மனிதநேயத்தின் மீதான நேரடித் தாக்குதல் என்றும் அம்மாநில முதல்வர் கேம்ச்சந்த் சிங் கடுமையாக கண்டித்தார். அவர், "இச்சம்பவத்தை நான் மிகக் கடுமையான வார்த்தைகளால் கண்டிக்கிறேன். இதற்குப் பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட்டு, தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு, சட்டத்தின் கீழ் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்" என்று அவர் கூறினார்.

இச்சம்பவம் நடந்த இடத்துக்கு அருகிலேயே மற்றொரு வெடிபொருளும் மீட்கப்பட்டதாகவும், குற்றவாளிகளைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் காவல் துறை தெரிவித்துள்ளது.

# தீவிர சிகிச்சையில் ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி?

லண்டன், ஏப்.8-

ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி, ஈரானின் கோம் நகரில் சுயநினைவற்ற நிலையில் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார் என ஒரு உளவுத்துறை தகவலை மேற்கோள் காட்டி டைம்ஸ் யுகே செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது.



டைம்ஸ் யுகேவின் செய்தியின்படி, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல், வளைகுடா நட்பு நாடுகளுடன் பகிர்ந்து கொண்ட உளவுத்துறை தகவல்களின் அடிப்படையில், மொஜ்தபா காமேனி சுயநினைவற்ற நிலையில் இருப்பதாகவும், அவருக்கு கோம் நகரில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்ச தலைவர் மொஜ்தபா காமேனியின் இருப்பிடத்தை முதன்முறையாக வெளிப்படுத்தும் அந்த உளவுக் குறிப்பை தாங்கள் அறிந்ததாகவும் டைம்ஸ் யுகே குறிப்பிட்டுள்ளது. மேலும், “ஈரான் ஆட்சியின் எந்தவொரு முடிவெடுக்கும் செயலிலும் அவரால் பங்கேற்க இயலாது” என டைம்ஸ் யுகே செய்தி வெளியிட்டது.

மேற்கு ஆசியாவில் மோதல் வெடித்ததிலிருந்து, மொஜ்தபா காமேனி எந்தவொரு பொதுவெளியிலும் தோன்றவில்லை. அவர் கூறியதாகக் கூறப்படும் செய்திகளை மட்டுமே ஈரான் அரசு ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

இதற்கிடையில், அயத்துல்லா காமேனியின் உடல் கோமில் அடக்கம் செய்யத் தயாராகி வருவதாக 'தி டைம்ஸ்' பத்திரிகையின் செய்தி குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை இரவு 8:00 மணிக்குள் ஒப்பந்தத்தை எட்டுமாறு ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார். வெள்ளை மாளிகையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், “அவர்களுக்கு நாளை வரை அவகாசம் உள்ளது. இப்போது என்ன நடக்கிறது என்று பார்ப்போம். அதற்குப் பிறகு, அவர்களுக்குப் பாலங்கள் ஏதும் இருக்காது. மின் நிலையங்கள் ஏதும் இருக்காது. கற்காலம் போன்ற நிலைதான் இருக்கும்,” என்று எச்சரித்தார்.

# தென், வட கடலோர தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஏப்.8-

தென் தமிழகம், வடக்கு கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் (ஏப்.7, 8) இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் வி.ஆர்.துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடந்த 24 மணி நேரத்தில், தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்துள்ளது.

அதிகபட்சமாக, ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், ராமேசுவரம், தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி, சென்னை ஒய்.எம்.சி.ஏ நந்தனம், வளசரவாக்கம், அண்ணா பல்கலைக்கழகம், திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் தலா 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

சென்னை அடையாறு, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, கன்னியாகுமரி மாவட்டம் இரணியலில் தலா 4 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

சுமார் 0.9 கி.மீ. உயரத்தில், மேற்கு வங்கம் முதல் மன்னார் வளைகுடா வரை ஒடிசா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகள், தெலங்கானா, ராயலசீமா, தமிழகம் வழியாக ஒரு காற்றழுத்தக் தாழ்வுப் பாதை (Trough) நிலவுகிறது.

இதன் காரணமாக, தென் தமிழகம், வடகடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்றும், நாளையும் (ஏப்.7,8) இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வட உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும். ஏப்9ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழகம், வடக்கு கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஏப்10ல் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏப்.11,12 ஆகிய தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை: தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 டிகிரி முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். ஏப்.9ம் தேதி முதல் ஏப்.11ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டி இருக்கக்கூடும்.

சென்னை, புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மாம்பழம் சின்னத்தை முடக்கோரிய வழக்கு ராமதாஸ் தரப்பு ஐகோர்ட்டில் மேல்முறையீடு

சென்னை, ஏப்.8-

உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, மாம்பழம் சின்னம் முடக்கோரிய வழக்கில் உரிமையியல் நீதிமன்றம் உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ராமதாஸ் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

உள்கட்சி பிரச்சினை தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்கு முடியும் வரை மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்க வேண்டும் என ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, சென்னை உரிமையியல் நீதிமன்றம் தள்ளுபடி செய்து மார்ச் 26ம் தேதி உத்தரவிட்டது.

மேலும், சட்டத்தில் அனுமதி இருந்தால், இந்த விவகாரம் தொடர்பாக ராமதாஸ் தேர்தல் ஆணையத்துக்கு மனு அளிக்கலாம். அதை தேர்தல் ஆணையம் சட்டப்படி பரிசீலித்து முடிவெடுக்கலாம் எனவும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இது சம்பந்தமாக சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகும்படி உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பில், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தரமாதிகாரி மற்றும் ஜ்.அருள்முருகன் அடங்கிய அமர்வில் முறையீடு செய்யப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக தாக்கல் செய்யப்படும் வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுகுறித்து மனுவாக தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர். விரைவில் மனு தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# “அப்பட்டமான பிளாக்மெயில் இது!” மகாராஷ்டிர முதல்வருக்கு தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி கண்டனம்

சென்னை ,ஏப்.8-

“திராவிட மாடல் அரசின் மதுரை கோவை மெட்ரோ திட்டங்களை புறக்கணித்துவிட்டு, நாங்கள் அறிவித்த வேட்பாளரை நீங்கள் தேர்வு செய்தால்தான், நாங்கள் இதை செய்வோம் என மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் சொல்வது அப்பட்டமான பிளாக்மெயிலுக்கு ஈடாகும்” என திமுக எம்.பி.க்கள் தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி கூட்டாக கண்டனம் தெரிவித்துள்ளனர்.



இது குறித்து அவர்கள் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “மதுரை கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக திராவிட மாடல் அரசு பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. மே 7, 2021 அன்று, உடனடியாக மதுரை மெட்ரோ திட்டம் தொடங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்து, கொள்கை வழிகாட்டுதல்களை வெளியிட்டார். பிப்ரவரி 20, 2023 அன்று சாத்தியக்கூறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மார்ச் 27, 2023 அன்று விரிவான திட்ட அறிக்கைக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

பிப்ரவரி 19, 2024 அன்று மெட்ரோ ரயில் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கை (டிபிஆர்) அதிகாரப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டது. இதன் மூலம் மாநில அளவிலான பணிகள் 100% நிறைவு பெற்றுள்ளன. செப்டம்பர் 6, 2025 அன்று திருமங்கலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, சுரங்கம் தோண்டும் பணிகளில் இருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. இந்த அனைத்து பணிகளையும் முதல்வர் ஸ்டாலின் முன்னெடுத்து முடித்துக் காட்டியுள்ளார்.

திராவிட மாடல் அரசின் மதுரை கோவை மெட்ரோ திட்டங்களை புறக்கணித்துவிட்டு, நாங்கள் அறிவித்த வேட்பாளரை நீங்கள் தேர்வு செய்தால்தான், நாங்கள் இதை செய்வோம் என சொல்வது அப்பட்டமான பிளாக்மெயிலுக்கு ஈடாகும். குறிப்பாக மக்கள் தொகையை காரணமாக காட்டி, மெட்ரோ திட்டங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்காமல் இருந்தது. தமிழர் நலனுக்கு மொத்தமாக தூரோகம் செய்யும் செயல். நாங்கள் செய்த வேலைகளை மறைத்துள்ளீர்கள். இதனால் தான் இத்தேர்தலை டெல்லி மற்றும் தமிழ்நாட்டுக்கான தேர்தல் என சொல்கிறோம்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 20 லட்சம் அளவை எட்டவில்லை என்றுக் கூறி கோவை மற்றும் மதுரை மெட்ரோவுக்கு பாஜக அரசு அனுமதி வழங்கவில்லை. ஆனால் மக்கள் தொகை குறைவான ஆக்ரா மற்றும் பாட்னாவுக்கு மெட்ரோ ரயில் அனுமதி வழங்கி இரட்டை நிலைபாட்டை பின்பற்றுகிறது ஒன்றிய பாஜக அரசு.

பாட்னாவிஸ் துணை முதல்வராக இருந்த காலத்தில், மகாராஷ்டிரா மாநிலத்துக்கு வரவேண்டிய பல முதலீடுகளை குஜராத்துக்கு மாற்றி விட்டனர். அவர், மதுரையில் மெட்ரோ திட்டத்தை கொண்டு வருவேன் எனக் கூறுவது ஏற்கத்தக்கதல்ல” என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.



# “ராதாபுரத்தில் பாஜகவிற்குப் பலம் சேர்க்கும் நாடார் சங்கம்!

## வேட்பாளர் பாலகிருஷ்ணனுக்கு அதிரடி ஆதரவு

ராதாபுரம் ஏப். 8-

நெல்லை மாவட்டம் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் பாலகிருஷ்ணன்க்கு, தமிழ்நாடு நாடார் சங்கம் தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.தமிழ்நாடு நாடார் சங்கத் தலைவர் முத்து ரமேஷ் அறிவுறுத்தலின்படி, சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் வேட்பாளர் பாலகிருஷ்ணனை நேரில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் தமிழ்நாடு நாடார் சங்கத் துணைத் தலைவர் எஸ்.ராஜேஷ், மாநில இளைஞரணித் தலைவர் எஸ்.பாஸ்கர் மற்றும் சங்கத்தின் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

வேட்பாளர் பாலகிருஷ்ணன்க்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்த நிர்வாகிகள், ராதாபுரம் தொகுதியில் அவரது வெற்றிக்குத் தங்களது சங்கம் மற்றும் சமுதாயத்தின் ஆதரவு உறுதியாக இருக்கும் எனத் தெரிவித்தனர்.



# தென்னை வாரியம்! விவசாயிகளின் வாழ்வாதாரம் காக்கப்படும்!” உடுமலை கே. ராதாகிருஷ்ணன் வாக்குறுதி

திருப்பூர் ஏப். 8-

திருப்பூர் மாவட்டம், உடுமலை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் உடுமலை கே. ராதாகிருஷ்ணன், நகராட்சிக்குட்பட்ட 1, 2, 3வது வார்டுகளில் இரட்டை இலை சின்னத்திற்குத் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

*முக்கிய வாக்குறுதிகள் - பேச்சு:*

"அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன், தென்னை விவசாயிகளின் நலன் கருதி 'தென்னை உற்பத்திப் பொருள் விற்பனை மதிப்புக் கூட்டு வாரியம்' அமைக்கப்படும். இதன் மூலம் தென்னைச் சார்ந்த பொருட்களை விவசாயிகள் இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக விற்பனை செய்ய வழிவகை செய்யப்படும்" என உறுதி அளித்தார்.

நிர்வாகப் போராட்டம்: உடுமலை சட்டமன்றத் தொகுதியின் வடக்குத் தாலுகாவை திண்டுக்கல் மாவட்டத்துடன் இணைக்க திமுக அரசு முயன்றபோது, அதைத் தடுத்து நிறுத்தியதாகக் குறிப்பிட்ட அவர், மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்தவுடன் இப்பகுதியின் வளர்ச்சிக்கு முழுமையாகப் பாடுபடுவேன் என்றார்.

இந்நிகழ்வில் நகரக் கழகச் செயலாளர் அக்கிம், தேமுதிக மாவட்டத் தலைவர் சாமி என்ற சிவராஜ், பாஜக நகர மண்டலத் தலைவர் பாலகுரு, மாவட்ட இணைச் செயலாளர் சாந்தி சீனிவாசன் மற்றும் 1, 2, 3வது வார்டு நிர்வாகிகள், கூட்டணி கட்சிப் பொறுப்பாளர்கள் எனத் திரளானோர் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தமிழ் நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ந்கான வேட்பு மனு தாக்கல் கோட்டாட்சியர் அலுவலகத்தில், அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் கட்சி வேட்பாளர் வசந்தி முருகேசன், கோட்டாட்சியர் ஆ. அனிதா அவர்களிடம் வேட்புமனு தாக்கல் செய்தார், மேலும் திருநெல்வேலி மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் தர்மராஜ் , மாவட்ட பொறுப்பாளர் வள்ளி நாயகம், சங்கரன் கோவில் M.P. கோட்டூர் சாமி பாண்டியன், பசும்பொன் மக்கள் தேசம் கட்சி சுப்பிரமணியன், தென்னிந்திய பார்வேர்ட் பிளாக் தென்காசி மாவட்ட செயலாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ புதுச்சேரி மாநிலத்தில் வரும் ஏப்ரல் 9ஆம் தேதி வியாழனன்று வாக்குப்பதிவு நடைபெறும் நிலையில், தேர்தல் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பாக பல்வேறு ஆயத்த பணிகள் நடைபெற்று தேர்தலுக்கு தயாராக இருக்கும் நிலையில், மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன், புதுவையை ஒட்டி அமைந்துள்ள பல்வேறு எல்லைப் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு வருவதன் தொடர் நிகழ்வாக, இரவு கோரிமேடு மற்றும் காலாப்பட்டு சோதனை சாவடிகளை ஆய்வு மேற்கொண்டார்கள்.



■ தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுபதிக்கு உட்பட்ட செங்கோட்டை பகுதியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 முன்னிட்டு, பொதுமக்களிடையே 100% தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்திய வாக்காளர் தோழன் விழிப்புணர்வு ரதத்தின் நிறைவினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. தலைமையில் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.




# மாவட்ட தேர்தல் துறை மற்றும் ஸ்வீப்பும் இணைந்து புதுச்சேரி மாநிலத்தில் 100 % சதவீத வாக்கினை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு

புதுச்சேரி, ஏப்.8-

மாவட்ட தேர்தல் துறை மற்றும் ஸ்வீப்பும் இணைந்து புதுச்சேரி மாநிலத்தில் 100 % சதவீத வாக்கினை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்று வருவதின் தொடர் நிகழ்வாக நேற்று இரவு

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அமைக்கப்பட்டுள்ள 845 வாக்குச் சாவடிகளிலும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயதானவர்களுக்கு உதவிடவும், வாக்காளர்கள் கொண்டு வரும் அலைபேசிகள், உள்ளிட்ட பொருட்களை வாக்குச்சாவடி உள்ளே எடுத்துச் செல்ல அனுமதி இல்லாததால், அவர்கள் வாக்களித்து விட்டு வரும் வரை அவற்றை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும், ஒரு வாக்குச்சாவடிக்கு இரு மாணவ மாணவியர் மேலும் தன்னார்வலர்களும்,

இது மட்டமல்லாமல், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும், தேர்தல் நடத்தும் அதிகாரி கூறும் முடியாத வாக்காளர்களை அழைத்து வந்து வாக்குப்பதிவிற்கு உதவி செய்திட தனியாக இரண்டு தன்னார்வலர்கள் என, புதுச்சேரியில் உள்ள பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மொத்தம் 1736 மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள், மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தமிழ் நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 கான சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினருக்கான வேட்பு மனு உறுதி மொழி ஆவணத்தை, கோட்டாட்சியர் ஆ.அனிதாவிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சங்கை கணேசன், தி.மு.க. முன்னாள் எம் பி தங்கவேல், தென்காசி மாவட்ட M.P. ஸ்ரீ ராணி குமார், தென்காசி மாவட்ட தலைவர் செல்வராஜ், மாநில செயற்குழு உறுப்பினர் மணிகண்டன் ஆகியோர் உடன் இருந்தனர்.



■ கிறிஸ்தவ வன்னியர் இளைஞர் சங்கத் தலைவர் தவாக வேட்பாளர்கள் சந்திப்பு. தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் பழனி, திண்டுக்கல் மற்றும் ஆத்தூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அந்தந்த மாவட்டப் பொறுப்பாளர்கள், கிறிஸ்தவ வன்னியர் இளைஞர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மைலாப்பூர் வேளாங்கன்னி அவர்களை நேரில் சந்தித்து, பொன்னாடை அணிவித்து வாழ்த்துப் பெற்றனர்.



■ புதுச்சேரி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜீனா கார்கே, அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் மாதம் ரூ 2500 மதிப்புள்ள உணவு பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்தார். மேலும் இலவச கல்வி, மாணவர்களுக்கு மாதம் ரூ 2000 உதவி தொகை உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளையும் வெளியிட்டார்.
























SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000